# மார்ச் - 25 - தவக்கால 5ம் ஞாயிறு

குருத்து ஞாயிறு - பரிசுத்த வார ஆரம்பம்

"என்னோடு உண்ணும் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" (மாற் 14 :17)

**முதல் வாசகம் : ஏசாயா 50 : 4 – 7**

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார் கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார். ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார் நான் கிளர்ந்தெழவில்லை விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோாக்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார் நான் அவமானம் அடையேன் என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன் இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன

**பதில்பாடல் :** என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்

**இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2 : 6 – 11**

சகோதர சகோதரிகளே! கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர் தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக "இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

**நற்செய்தி :**

**ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளைத் தியானித்திட மாற்கு நற்செய்தி 14 : 1, 15 – 47 வரையான வார்த்தைகளைப் பாவிக்கவும்.**

**தியானம்:** இன்று குருத்தோலை ஞாயிறு. மக்களின் ஆரவார தொனியிடையே மாபரன் யேசு பவனி வந்த நாள். துரோகத்தனமும், காட்டிக் கொடுப்பும் தொடங்கிய நாள். உண்மையின் குரல்வளையை நசுக்க தலைவர்கள் திட்டம் தீட்டிய நாள். 30 வெள்ளிக்காசுக்கு, பாவிகளை அரவணைக்க வந்தவர், பாவத்தில் இருந்து விடுதலை தர வந்தவர் விலை பேசப்பட்ட நாள். யேசுவின் கல்வாரிப் பாதையை ஆரம்பித்து வைத்த நாள். தமது பாடுகளைப்பற்றி முன் அறிவித்த நாள். இத்தனை பெருமைகளா இந்த ஞாயிறுக்கு? சிந்தித்து பார்ப்போம். இன்று யேசு இவ்வுலகில் வாழ்ந்தால் அவருக்கு என்ன நடந்திருக்கும்? இத்தனை கேவலமான நிகழ்வுகள் நடக்காமலா இருந்திருக்கும்? இல்லவே இல்லை. இன்றும் இவ்வுலகம் அவ்வாறான நிலையில் தானே உள்ளது. காட்டிக்கொடுப்பது, கூட இருந்தே குழிபறிப்பது, விலைபேசப்படுவது இல்லையா? ஒருவர் சமுதாயத்தால் உயர்வாக கருதப்பட்டால் அவரை விமர்சிப்பவர்கள் இல்லையா? எதிர் மறையான கொள்கை உடையவர்கள் இல்லையா? உயரத்தில் இருந்த பலர், சில நொடிகளில் குப்பையாக வீசப்படவில்லையா? என்ன செய்தாலும் குறை கூறுபவர்கள் இல்லையா? ஒரே ஒரு மாற்றம் மட்டும் இருந்திருக்கும், சிலுவைக்குப் பதில் துப்பாக்கி குண்டு பாய்ந்திருக்கும். அப்படியானால் இந்த உலகம் இன்னமும் மாறவில்லையா? நாம் சிந்திக்க வேண்டிய நேரம் இது, ஒவ்வொரு வருடமும் வந்து போவது போல் வருகின்ற நிகழ்வுகள் என்று மட்டும் நாம் நினைக்கக் கூடாது. அது நமக்கு தரும் செய்தி என்ன? இத்தவக்கலம் நம்மை எப்படி மாற்றியது? அல்லது நாம் எப்படி மாறினோம்? இன்று உலகில் பல மாற்றங்கள். தொழில் நுட்ப வளர்ச்சி முடிவின்றி செல்கிறது. ஒவ்வொரு நாளும் புதிது புதிதான கண்டு பிடிப்புகள். ஆனால் மனிதனின் இறப்பைப் பற்றியோ, அதன் பின் என்ன நடைபெறுகிறது என்பதைப் பற்றியோ யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. இதில்தான் நமது விசுவாசத்தின் மறை உண்மை பொதிந்திருக்கிறது. எனவே யேசு கற்பித்தபடி இறை சித்தம் அறிந்து எமது வாழ்வை கொண்டு நடத்துவோம். கடவுளின் குரலுக்கு செவி சாய்ப்போம். துரோகத்தையும், காட்டிக் கொடுப்பையும், தேவையற்ற விமர்சனங்களையும் விட்டு விடுவோம். விட்டுக்கொடுத்து, மன்னித்து, ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழப் பழகுவோமாக.